# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

# 2013 நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ சிறிகமல் பிலீசியன் த சில்வா உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி மற்றும் மகளிர் விவகார நன்நடத்தை அத்துடன் சிறுவர் பாதுகாப்புச் சேவை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:**

**(கே/v (1)13/15)**

அ. பமுனுகம வைத்தியசாலையின் கற்பிணிகளின் வாட் உரிய முறையில் செயற்படவில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஆ. அவ் வைத்தியசாலையின் இரசாயண கூடம் செயலிழந்து காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அவ் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு உரிய முறையில் செயற்படவில்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஈ. வைத்தியசாலையின் பணியாற் தொகுதியினரிடையே காணப்படும் புரிந்துணர்வு இன்மையின் காரணமாக நோயாளிகளும் நிர்வாகமும் சிக்கலுக்கு உட்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. இந் நிலைமை தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **சபைக் கூட்டம் - I**

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>

பிரேரணை :

2013.10.22 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட தீர்மானத்தின் படி இன்றைய தினம் கலைந்து சென்ற பின் இந்த சபை 2013 நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி மு.ப. 9.30 இற்கு கூட வேண்டியதுடன் 2013 நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி (செவ்வாய்கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத நாள் ஒன்றாகக் கருதி செயற்பட வேண்டும்.

**சபைக் கூட்டம் - II**

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>

பிரேரணை :

"<u>2014 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் மீதான விவாதம் மற்றும் அது சம்மந்தமான செயற்பாடுகளுக்காக</u>" இதற்கு முன்னர் எவ்வாறான முடிவொன்று எடுத்திருந்த போதும் அதைக் கருத்தில் கொள்ளாது 2013.10.22 ஆந் திகதி நடைபெற்ற சபை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தினைக் கருத்திற் கொண்டு 2013 டிசெம்பர் மாதம் 03, 04, 05 மற்றும் 06 ஆகிய நாட்கள் "<u>2014 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றின் மீதான விவாதம் மற்றும் அதனோடு தொடர்புடைய நடவடிக்கைக்காக</u>" ஒதுக்கப்பட்ட தினங்கள் எனக் கருதி செயற்பட வேண்டும்.

**X.** **சபை நடவடிக்கை - I**

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>

பிரேரணை :

"இதற்கு முன்னர் எவ்வாறான முடிவு எடுக்கப்பட்டிருந்த போதும் அதைக் கருத்தில் கொள்ளாது "<u>2014 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றினை மாகாண சபைக்கு சமர்ப்பிப்பது</u>" 2013.11.26 ஆந் திகதி இடம்பெற வேண்டும்.

## சபை நடவடிக்கை - II

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u>

பிரேரணை :

"இன்றைய தின நிகழ்ச்சி நிரலில் "<u>இலக்கம் - XI தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கையின் கீழேயான</u>" விடய செயற்பாடுகளின் ஒழுங்கு முறையே 03, 01 மற்றும் 02 என்ற முறையில் இடம்பெற வேண்டும் என கருதி செயற்பட வேண்டும்.

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்

இலங்கை மின்சார சபையில் வருடாந்தம் இடம் பெறும் அதிகளவு நட்டத்தை குறைப்பதற்கு எனக் குறிப்பிட்டு சென்ற ஏப்ரல் மாதத்து மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து அந்த நட்டத்திற்குரிய நிதியை பொது மக்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மழை கிடைக்காது நீர் வற்றியதன் காரணமாக நாட்டின் மின்சாரத் தேவையில் (18%) அளவு நீர் மின் உற்பத்தியின் மூலம் மின்சாரத்தைத் தயாரிப்பது இடம்பெற்றது எனவும், தனியார் மின் நிலையங்களின் மூலம் கூடிய விலைக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதும் வேறு முறைகளின் மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. தற்போது பல மாத காலம் தொடக்கம் பெய்யும் அடை மழையின் காரணமாக நீர் தேக்கங்கள் நிரம்பி நீர் மீதமாக்கப்பட்டு 85% மின்சாரத்தினை உற்பத்தி செய்வது நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் இடம் பெறுகின்றது எனவே அதிகரிக்கப்பட்ட மின்சாரப் பட்டியலை உடனடியாக குறைத்து மக்களுக்கு சலுகையை வழங்குமாறு இந்த மேல் மாகாண மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/v (01)13/05)**

### 02. கௌரவ அசோகா லங்காதிலக உறுப்பினர்

30 வருட காலம் தொடக்கம் பயங்கரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்து எதிர்காலத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாமல் இருந்த எங்களுக்கு இன்று இந் நாட்டினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்டு மகிழ்ச்சி அடையக் கூடியதாக உள்ளது. இதைப் பார்க்கும் போது எங்களது எதிர்கால பரம்பரை எங்களை விட அதிஷ்டசாலிகளாகுவதுடன் இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் சம்மந்தமாக நாங்கள் பெருமையடையக் கூடியதாக உள்ளது.

இதன் மூலம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்ட கொழும்பு தெற்கு துறைமுகமானது ஆசியாவுக்குமே ஆச்சரியம் மிக்க நடவடிக்கை ஒன்றாகும். இதன் மூலம் எங்களது நாட்டின் புவியியல் அமைப்புக் கூட மாற்றம் அடைந்துள்ளது. உலகத்தில் உற்பத்திச் செய்யப்படும் எந்தவொரு பாரிய கப்பல் ஒன்றுக்குக் கூட எங்கள் நாட்டில் சேவையைப் பெற்றுக் கொள்ளவும், உலகத்தில் எந்தவொரு நாட்டிற்கும் எங்களது துறைமுகத்தினூடாக சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் இதன் மூலம் இடம் கிடைத்துள்ளது. பல்வேறுபட்ட எதிர்ப்பார்ப்புக்களைக் கொண்டவர்கள் எவ்வாறு விமர்சித்த போதும் நாட்டை நேசிப்பவர்கள் இந்த விஷேடமான செயற்பாட்டினைப் பாராட்ட வேண்டும். நாட்டினைப் பாதுகாப்பதற்கு போராடிய இலங்கை மக்களின் நன்மைக்காக இவ்வாறான துறைமுகம் ஒன்றினைக் கட்டி மக்களுக்கு ஒப்படைத்ததற்கு மேன்மை தங்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் கௌரவ ரோஹித அபேகுணவர்தன அவர்களுக்கும் துறைமுக அதிகார சபையின் தலைவர் அவர்களுக்கும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிய எல்லா உத்தியோகத்தர்களுக்கும், தொழிற் சங்கங்களுக்கும் இதனைப் பார்வையிட்டு பாராட்டினை வழங்கிய யாவருக்கும் இந்த மேல் மாகாண மாகாண சபை தனது நன்றியைத் தெரிவித்து ஆசிர்வதிக்கின்றது. **(பி/v (01)13/06)**

### 03. கௌரவ நெலுக் தர்ஷன மல்லவ உறுப்பினர்

அரச சேவைக்கு பணியாட்களை ஆட்சேர்க்கும் போது கீழ்மட்ட பதவிகளை வகிப்பவர்களான சிற்றூழியர் மட்டமே அப்பணியாட்களில் காணப்படுகின்றனர். இச் சிற்றூழியர்களை இதற்கு முன்னர் பதவிகளில் சேர்க்கும் போது ஆகக் குறைந்த கல்வித் தகைமை காணப்பட்ட போதும் அது அரச சேவைக்கு சேர்வதற்கு போதுமானதாக இருந்தது எனினும் இவ்வேளையில் அரசாங்கம் தீர்மானித்ததைப் போன்று சிற்றூழியர் பதவியினைப் பெற்றுக் கொள்ள க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 பாடங்களை சித்தி எய்தி (கணிதம் உள்ளடங்களாக) இரண்டு திறமைச் சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும். இது நாட்டின் சாதாரணதர பரீட்சையில் தோற்றுபவர்களில் 50% அளவினருக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதே போல் சாதாரணதரப் பரீட்சையில் கணிதப் பாடத்தில் சித்தி எய்யாத பகுதியினர்கள் 50% ஆகும் எனவே இதன் மூலம் தெரிய வருவது என்னவென்றால் நாட்டில் உள்ள மாணவர்களில் 50% க்கு அரச சேவையில் ஆகக் குறைந்த தொழில் ஒன்றைக் கூட பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இல்லாமல் போகின்றது. இதன் மூலம் எதிர்காலத்தில் சமூகப் பிரச்சினை ஒன்று ஏற்படும். எனவே மேல் மாகாண அரச சேவைக்கு சிற்றூழியர்களை ஆட்சேர்க்கும் போது க.பொ.த (சா.த) பரீட்சையில் தோற்றியிருப்பது மட்டும் போதுமானது என இச் சந்தர்ப்பத்தில் கருத வேண்டும் என இச் சபை பிரேரணை தெரிவிக்கின்றது.

**(பி/v (01)13/10)**

2013.10.22 ஆந் திகதி நடைபெற்ற
சபைக் கூட்டம் தொடர்பான செயற்பாடு

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.10.22 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,

பத்தரமுல்ல.